ரெஜிஸ்டர் நெ. M. 3855.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை

Vol. 7. செப்டம்பர், 1944 நெ. 6

எடிடோரியல் கமிட்டி.

ஸ்ரீமான்கள்

பி. எஸ். குமாரஸ்வாமி ராஜு, எம்.எல்.ஏ.

எஸ். சத்தியநாராயண.

எடிடர்.

ஸ்ரீமான்

வி. கிப்பன்ன, பி.ஏ., பி.எல்.

---

சென்னை மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் யூனியன்

டெலிபோன் நெ. 86166.

# பொருள் அடக்கம்.


1. தலையங்கம்—
    சென்னையின் திட்டம் ... 137
    விஞ்ஞானம்—மேலும் விஞ்ஞானம் ... 140

2. தண்ணீரை சுத்தமாக வைத்துக்கோள் ... 141

3. மாகாணத்தில் மாடுகளின் நோய்கள் ... 142

4. மாடுகளின் பாதுகாப்பு ... 143

5. கிராம உத்தியோகஸ்தர்களும், பஞ்சாயத்து போர்டு பிரசிடேண்டுகளும் ... 143

6. கிராம புனருத்தாரணம் ... 144

7. லோகல் போர்டுகள் லைசன்ஸ் கட்டணம் வசூலிக்குமுன் நோட்டீஸ் கொடுக்க வேண்டிய அவசியம் ... 145

8. வர்த்தமானங்களும், குறிப்புகளும் ... 145






கிராம பஞ்சாயத்து போர்டின் கடமை.

கிராமத்தின் சௌகரியத்துக்காக கிராம ஜனங்களின் சரீர ஆரோக்கியம் அவசியம். ஆகையால் சகல வியாதி நிவாரணியாயிருக்கும்

அம்ருதாஞ்சனத்தை

கிராமத்திலேயே இருக்கும்படியாய் பார்த்துக் கொள்ளவேண்டும்.

# கிராமப் பஞ்சாயத்து பத்திரிகை.

Vol. 7 | செப்டம்பர், 1944 | No. 6

நிருபர்கள் எழுதும் அபிப்பிராயங்களுக்கு எடிட்டோரியல் கமிட்டி ஜவாப்தாரி ஆகிறதில்லை. இந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறவர்கள் தெளிவாக காகிதத்தில் ஒரே பக்கம் எழுத வேண்டியது. தபாற் செலவுக்கு வேண்டிய ஸ்டாம்புகள் அனுப்பினாலன்றிக் கையெழுத்துப் பிரதிகளைத் திருப்பியனுப்பமுடியாது. எந்த மாதத்தின் சஞ்சிகைக்காக வியாஸம் அனுப்பப்படுகிறதோ அதற்கு முன்மாதத்தில் 15-ந் தேதிக்குள்ளாக அனுப்பவேண்டும்.

---

## தலையங்கம்.

### சென்னையின் திட்டம்.

சென்னை கவர்மெண்டார் யுத்தத்திற்குப்பின் ஏற்பாட்டிற்காக ஒரு பொது நிர்மாண திட்ட கமிடியையும், 11 சப் கமிடிகளையும் நியமித்திருக்கிறார்கள். இம்மாதம் 4-ம் தேதி கவர்னர் கூட்டுறவு சம்மந்த கமிடியை துவக்கி வைத்தார். அதன் முழு விவரமும் வேறு இடத்தில் காண்க. யுத்தத்திற்குப்பின் எந்த விதமான அரசியல் மாறுதல்கள் ஏற்படப் போகின்றன என்பது தெரியுமுன் இந்த நிர்மாண திட்டங்கள் வகுப்பதை சிலர் குறை கூறுகிறார்கள் என்றும் அவர் பிரஸ்தாபித்தார். இதில் சிறிதளவு உண்மை இருந்தபோதிலும், புத்திசாலித்தனமானதும், ஏற்படும் செலவு விஷயத்தில் குறை கூறமுடியாததுமான எந்த திட்டத்தையும் எந்தவித கவர்மெண்டாரும் ஆதரிக்கத்தான் செய்வார்கள் என்று சொன்னார். ஆனால் பம்பாய் கவர்மெண்டு ஆலோசனையாளர், ஸர் ஹென்ரி நைட் அவர்கள், பம்பாய் மாகாண கிராமாபிவிருத்தி போர்டின் கூட்டத்தில் பேசியபோது, எந்த திட்டத்தை அமுல் நடத்தவும், கட்டுப்பாடுகளும் வரி விதித்தலும் செய்யவேண்டி வருமாதலால், பொது ஜனங்கள் ஆதரவு கொண்ட கவர்மெண்டாரால் அது சாத்தியமாகும் என்று தெளிவாகச் சொன்னார். தற்போதிருக்கும் கவர்மெண்டு பூர்வாங்கவேலைகளை செய்து, முக்கியமாக அதற்கு தேவையாக இருக்கும் சிப்பந்திகளை தேர்ச்சி பெற செய்யவேண்டும் என்று அவர் சொன்னார்.

கடைசியாக சமீபத்தில் இவ்விஷயத்தைப்பற்றி இந்திய கவர்மெண்டு திட்டம் அபிவிருத்தி இலாகா மெம்பர், ஸர் ஆர்தஷீர் டலால் அவர்கள் பிரஸ்தாபித்திருக்கிறார். அவருடைய அபிப்பிராயங்களும் அநேகமாக ஸர். நைட்டின் அபிப்பிராயங்களை யொத்ததாகவே இருக்கின்றன. (1) சில காரியங்களை பொதுஜன ஆதரவு கொண்ட கவர்மெண்டுதான் செய்யமுடியும். (2) ஆனால் வேறு சில காரியங்களுக்கு அ.து. எரு உற்பத்தி சாலை

போன்றவைகளை, எந்த கவர்மெண்டும் ஏற்பாடு செய்யலாம். (3) முக்கியமாக செய்யவேண்டிய பூர்வாங்க வேலை என்னவென்றால், பிற்காலத்திற்கு விஞ்ஞான சாஸ்திரிகள், டாக்டர்கள், விவசாய நிபுணர்கள், கல்வி நிபுணர்கள், அரசியல் நிபுணர்கள், இவைகளை பயிற்சி யளித்து தேர்ச்சி பெற செய்வதே. பம்பாய் மாகாணம் தயார் செய்திருக்கும் ஐந்து வருஷ திட்டத்தை பரிசிலனை செய்து பார்க்கப்படவேண்டிய திட்டம்தான் என்று அவர் சொல்லியிருக்கிறார். பிற்கால திட்டங்கள் யுத்தத்திலிருந்து திரும்பும் ராணுவ சேவகர்களுடைய நன்மை ஒன்றையே லக்ஷியமாகக் கொண்டதாக இராமல் எல்லா ஜனங்களுக்கும் நன்மை தரக்கூடியதாக இருக்கும் என்று சொன்னார்.

இந்த பேச்சுகளிலெல்லாம் ராணுவ சேவை செய்தவர்களுக்கு நன்மை செய்வது ஒரு முக்கிய நோக்கமாக பிரஸ்தாபிக்கப்பட்டபோதிலும், பொதுவாக தேச புனருத்தாரணம் விஷயமாகவும் அதிக கவனம் செலுத்தப்பட்டுமிருக்கிறது. அரசியல் பிரச்னை தீரும் வரையில் பொருளாதார திட்டங்கள் காத்திருக்கவேண்டிய அவசியமில்லை என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. சென்னையில் ஸர் ஆஸ்டின் அவர்கள் தேகாரோக்கியம், கல்வி, சுகாதாரம் இதுபோன்றவைகளைக் குறித்து கவர்மெண்டார் ஏற்படுத்தவிருக்கும் திட்டங்களைக் குறித்து முன் இதழ்களில் தெரிவித்திருக்கிறோம். பூர்வாங்க வேலைகள் மும்முரமாக துவக்கப்படப் போகின்றன என்பதைப்பற்றி சந்தேகமில்லை. இதோடுகூட இந்த திட்டங்களை அமுலுக்கு கொண்டுவரும் காலத்தில் உதவி செய்ய பொதுஜனங்களையும் போதித்து பயிற்சியளிக்க வேண்டும். பொது ஜனங்களின் சராசரி வருமானத்தை அதிகரிக்கவும், பொதுவாக பொருளாதார நிலைமையை உயர்த்தவும் இத்திட்டங்கள் வகுக்கப்படுவதால், அவர்களும் இதில் மிக்க அக்கரைகொண்டவர்கள்தான். ஆகவே முதலிலிருந்தே அவர்களையும் இதில் சம்பந்தப்படும்படி செய்யவேண்டும். இந்த நோக்கத்துடன் பார்த்தால் சென்னையில் கமிடிகளில் அங்கத்தினர்கள் நியமனம் திருப்திகரமாக இல்லை. நியமிக்கப்பட்டிருக்கும் அங்கத்தினர்கள் சிலர் மிக்க மேன்மையானவர்களானாலும், இது இவர்களுடைய தனிப்பட்ட அந்தஸ்து, மதிப்பு இவைகளைப் பொறுத்ததல்ல. இது கொள்கையை பொறுத்ததே. மேலும் இக்கமிடிகளில் நியமிக்கப்பட்டிருக்கும் அங்கத்தினர்கள் யாவரும் ஒரே அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். பின்னிட்டு வரப்போகும் சர்கார் அநேகமாக காங்கிரஸ் அங்கத்தினர் கொண்டதாகத் தானிருக்குமாகையால், இக்கமிடி செய்யும் சிபார்சுகள் அமுலுக்கு கொண்டுவருவதில் தடைகள் ஏற்படலாம். நம் மாகாணத்தில் பஞ்சாயத்துகள் பல இடையூறுகளுக்கிடையிலும் தங்கள் வேலைகளை திருப்திகரமாகத்தான் செய்துக்கொண்டு வருகிறதாகையால், கிராம பிரச்னைகளை உத்தியோகப் பற்றற்றவர்கள் முறையாக கவனித்து தீர்த்து வைக்கக்கூடவில்லை என்று குறை சொல்லமுடியாது. பஞ்சாயத்துகளையும் பூர்ணமாக இத்திட்டங்களை அமுல் நடத்துவதில் பங்கெடுக்க அனுமதித்து அவைகளின் ஒத்துழைப்பையும் பெறாதபக்ஷத்தில், இத்திட்டங்களெல்லாம் வெறும் காகித திட்டங்களாகவே இருக்குமேயன்றி, பொது மக்களின் வாழ்க்கையை சீர்படுத்த முடியாது என்று நாம் திடமாக நம்புகிறோம். ஆகவே மாகாண பஞ்சாயத்து போர்டுகளின் அங்கத்தினர்கள் ஒருவரும் சென்னை திட்டத்தில் சேர்க்கப்படாமலிருப்பதைக் குறித்து வருந்துகிறோம். மேலும் உத்தியோகப் பற்றற்ற கூட்டுறவு இயக்க ஸ்தாபனங்களும் முன்னதாக

இது விஷயமாக கலந்தாலோசிக்கப்பட்ட யோசனைகளைப்பற்றியும் விரும்புகிறோம். கூட்டுறவு இயக்கத்தின் மூலம் தான் நம் [illegible] நிறைவேற வேண்டும். சில பெரிய ஊழியர்கள் தனிப்பட்ட முறையில் சேர்க்கப்பட்டிருப்பது நமக்கு திருப்தியளிக்கும் விஷயமல்ல. ராணுவத்தில் எவ்வித வேலைக்கும் எழுத்தறிவு அத்யாவசியம். எழுத்தறிவில்லாதவர்களுக்கு அங்கு வேலை கிடையாது.

பிரசுரிக்கப்பட்ட எல்லா பொருளாதார திட்டங்களும் வயது வந்தவர்கள் கல்வியை வற்புறுத்துகின்றன. சார்ஜெண்டு என்பவர் சமர்பித்திருக்கும் யாதாஸ்திலும் அப்படியே. ஆகவே, தென்னிந்திய வயது வந்தவர்கள் கல்விச் சங்கம், ஆந்திரதேச புத்தகசாலைச் சங்கம், சென்னை புத்தகசாலை சங்கம் இவைபோன்ற ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளை அழைத்திருக்கவேண்டும். யுத்தத்திற்குப்பின் பூரண சுதந்திரமும் ஜனநாயக முறையும் கொடுக்கப்பட போவதால், சட்ட சபைகள் வேலை செய்யாமலிருக்கும் சமயத்தில் ஆலோசனையாளர்கள், நிர்மாண வேலைகளில் பல துறைகளில் சேவை செய்துவரும் பல உத்தியோகப் பற்றற்ற ஸ்தாபனங்களின் யோசனையையாவது கேட்டிருக்கவேண்டும். அப்படி செய்திருந்தால், கமிடிகளில் சரியான பிரதிநிதித்வம் வாய்ந்த அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டிருப்பார்கள்.

சென்னை கவர்னரின் பிரசங்கத்திலிருந்து ஜனங்கள் மிக பெரிய வேலைகள் சாதிக்கப்படப்போகின்றன என்று எதிர்பார்க்க இடமிருந்தாலும், சென்னை கவர்மெண்டும் தேசத்தின் மற்ற பிரதேசங்களில் நடக்கப்போவதைப்போல், பூர்வாங்க வேலைகளைத்தான் அடிப்படையாக செய்து முடிக்கும் என்பது நிச்சயம். ஆகையால் வீணாக அதிக செலவு பிடிக்கும் காகித திட்டங்களை பொதுஜன ஆதரவும், தேவையான செலவும், வேண்டிய வருமானம் இல்லாமலிருக்கும்போதும், வகுக்காமல், முக்கியமான பூர்வாங்க வேலைச் செய்வதிலேயே கவனம் செலுத்தி, மேலும் அதில் இப்போதிருக்கும் உத்தியோகப் பற்றற்ற ஸ்தாபனங்களையும் கலந்தாலோசிக்க சந்தர்ப்பம் கொடுத்து வேலை செய்யுமாறு கூறுவோம். ஸர் டலால் குறிப்பிட்ட இரண்டாவது இனத்தைச் சேர்ந்த வேலைகளையும் தாராளமாக செய்யலாம். பின்னிட்டு பொது ஜன ஆதரவுடன் தயார் செய்யப்படும் திட்டங்களுக்கு இந்த வேலை நல்ல அஸ்திவாரமாக இருக்கும்.

---

## விஞ்ஞானம்—மேலும் விஞ்ஞானம்.

ஆசிரியர் ஹில் என்பவர் "டைம்ஸ்" பத்திரிகையில் எழுதியிருக்கும் "நாம் உண்மையை கவனிப்போம்" என்ற கட்டுரையைப்பற்றி "ஹிந்து" பத்திரிகையில் வெளியாகி யிருக்கிறது. அது என்னவெனில், இந்தியாவில் மரண விகிதம் இங்கிலாந்தைவிட 4 முதல் 8 பங்கு அதிகம். இங்கு ஒருவனுக்கு எதிர்பார்க்கப்படும் வயது 26, அங்கு 62. பிறந்தவர்களில் பாதி பேர்தான் இங்கு 22 வயதடைகிறார்கள், அங்கு 69. ஜனத்தொகையில் 25 முதல் 50 சத விகிதம் மலேரியா ஜுரத்தால் பீடிக்கப்படுகிறார்கள். க்ஷயம், வாந்திபேதி, பிளேக், அம்மை இம்மாதிரி தடுக்கக்கூடிய வியாதிகளால் வருஷா வருஷம் இறப்பவர்கள் லக்ஷக்கணக்கில். மேலும் அநேக ஜனங்கள் அரை வயிறு ஆகாரமே உண்ணுகிறார்கள். அதில் பல லக்ஷம் ஜனங்கள் பட்டினி கிடக்கவேண்டி யிருக்கிறது. இதனால் விளைவது

என்ன. போஷாப்பின்மையுடன் வியாதியும் சேர்ந்த தரித்திரமும், வலி வில்லாமையும் உண்டாகின்றன. இப்படியிருந்தும் இந்தியாவின் ஜனத் தொகை பிரதி வருஷம் 60 லக்ஷம், அதாவது 15 சத விகிதம் அதிகரித்து வருகிறது. மேலும் 50 சத விகிதம் அதிக உணவு தேவையாக யிருக் கிறது. இந்த நிலைமையில் தற்சமயம் அமுல் செய்து வரப்படும் விவசாய முறைகளால் இது சாத்தியமாகுமா என்று கேட்கிறார். கற்பத்தடை முதலிய முறைகளால் இதை உடனே தடுக்க முடியும் என்று அவர் நம்ப வில்லை. ஆகவே வேறு என்னதான் பரிகாரம். நவீன விஞ்ஞான முறை களில் இந்தியாவின் செல்வம், அதன் க்ஷேமத்தில் அக்கரை கொண்ட எல்லாருடைய ஒத்துழைப்பினால் விருத்தி செய்வது ஒன்றுதான் அதற்கு வழி என்று திடமாக கூறுகிறார்.

இப்படியானால் ஜனங்களின் மனதை விஞ்ஞானத் துறைகளில் செலுத்தச் செய்யாமல் இது சாத்தியமாகுமா? தேசத்தில் தற்சமயம் இருக்கும் அறியாமையான நிலைமையை—அது கதர் இயக்கமானாலும் சரி, விவசாய விருத்தியானாலும் சரி, பெரிய தொழிற்சாலை ஏற்படுத்துவதானா லும் சரி—கவனிக்கும்படி, கவர்மெண்டு, கல்வி நிபுணர்கள், உத்தியோகப் பற்றற்ற தலைவர்கள் உள்பட, எல்லாரையும் வேண்டிக்கொள்ளுகிறோம். சமீபத்தில் ஸர் சுல்டான் அஹமத், தரித்திரம், வியாதி, அறியாமை இவை களுடன் போராடி அழித்து, வாழ்க்கையை மேன்மைபடுத்தி, தேகாரோக் யத்தை அதிகரித்து, எழுத்தறிவில்லாமையை ஒழிக்கவே இத்திட்டங்கள் எல்லாம் ஏற்பட்டிருப்பதாக, ஒரு பிரசங்கத்தில் சொன்னார். அப்படி யானால் எல்லோரும் அபிப்பிராய பேதமின்றி ஒப்புக்கொண்டிருக்கும் கல்வி புகட்டும் திட்டத்தை ஏன் உடனே அமுலுக்கு கொண்டுவரக் கூடாது. இச்சீர்திருத்தம் நிறைவேறினால், வியாதி, தரித்திரம் இவைகளை போக்குவதுகூட கொஞ்சம் சுலபமாகலாம். இந்தியாவின் அடிப்படையான ஜீவநாடி கிராமம்தான். எந்த திட்டமும் கிராமத்தை எட்டாதவரையில், அது பகற்கனவாகவே இருக்கும். ஆகவே வெறும் மனக்கோட்டை கட் டாமல், பஞ்சாயத்து, கூட்டுறவு சங்கம், கிராம பள்ளிக்கூடம், கிராம புத்தகசாலை இவைபோன்ற ஸ்தாபனங்கள்மூலம் விஞ்ஞான அறிவை கிராம பிரதேசங்களில் தீவிரமாக பரப்ப திட்டம் வகுப்போம். அறியாமை யிலிருந்து விடுதலையை முதல் முதலாக அடைவோம்.

---

## சந்தாதாரர்களுக்கு விண்ணப்பம்.

1943-44க்கு சேர வேண்டிய சந்தா தொகை ரூபா 3-0-0ம் அனுப்பு மாறு கேட்டுக் கொள்ளுகிறோம். டிசம்பர் மாதம் முதல் பத்திரிகையை வி. பி. மூலம் அனுப்புகிறோம். தயவு செய்து வி. பி. யை பணம் கட்டி பெற்றுக் கொள்ளுங்கள். தாங்கள் இதுவரையில் சென்னை மாகாண பஞ்சா யத்து யூனியனையும் அதன் பத்திரிகையையும் ஆதரவளித்து பாராட்டின தற்கு வந்தன மளிக்கிறோம். இனியும் இம்மாதிரி ஆதரவளித்து பாராட்டு வீர் என்று நம்புகிறோம்.

வி. வியயன்னா,
ஜெனரல் செக்ரிடரி.

# தண்ணீரை சுத்தமாக வைத்துக்கொள்.

நம் தேசத்தில் கிராமப் பிரதேசங்களில் நஞ்சை, புஞ்சை நிலங்களில் ஏரி, குளம், கால்வாய், ஆறு, போன்ற ஜலாதாரங்களுக்கு குறைவே யில்லை.

ஆயினும் அப்பிரதேசங்களில் ஏன் வியாதிகள் வராமலிருப்பதில்லை. இதற்கு காரணம் என்னவென்றால் ஜனங்கள் அந்த ஜலத்தை சுத்தமாக வைத்துக் கொள்ளாமல் அசுத்தப்படுத்துகிறார்கள். ஒரே குளத்தில் ஒரு பக்கம் துணி துவைக்கவும், குளிக்கவும், ஆடு மாடுகள் கழுவவும், இன்னும் இதர அசுத்தமான காரியங்கள் செய்யவும் மற்றொரு புறமிருந்து தண்ணீரை குடிக்கவும் உபயோகிக்கிறார்கள்.

**குளக்கரை:—**

குளத்தில் பல் துலக்குவது, பல் குச்சி முதலிய அசுத்தமான சாமான்களை போடுவது, துப்புவது இது போன்ற கெட்ட பழக்கங்கள் அதிகமாக இருக்கிறது. இந்த சிறிய தவறுகள் நீடித்து நடந்து வந்தால், அதிலிருந்து பெரிய அபாயங்கள் ஏற்படுகின்றன. இவைகளெல்லாம் குளத்திற்கு கொஞ்சம் தூரத்தில் தான் செய்யப்பட வேண்டும்., சுத்தமான பழக்கங்கள் ஏற்படவேண்டும்.

**தண்ணீர் :—**

குடி தண்ணீரில்லாமல் கிராமத்தார்கள் உயிர் வாழ முடியாது. அந்த தண்ணீரை சுத்தமாக வைத்திருப்பது கிராமத்திலிருக்கும் ஒவ்வொருவருடைய கடமையாகும். அதற்காக ஒரு காவல்காரனை ஏற்படுத்தி விட்டு தன் கடமை தீர்ந்து விட்டதாக அவர்கள் நினைக்கக் கூடாது. ஒரு விதமான அசுத்தமும் தண்ணீரில் கலக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆடு மாடுகள் கழுவுவது கூடவே கூடாது. மரம் முதலிய சாமான்களை அத்தண்ணீரில் ஊறும்படி போடக் கூடாது. இவைகளைக் குறித்து ஜனங்களுக்கு நன்றாக போதிக்கப்படவேண்டும்.

அநேக கிராமங்களில் குடி தண்ணீர் குளத்திலேயே துணிகள் துவைக்கப்பட்டு உலர்த்தப்படுகின்றன. இதற்கென்று தனியாக ஒரு குளம் உபயோகப்படுத்தவேண்டுமே தவிர கண்டிப்பாக குடி தண்ணீர் குளத்தில் இப்படி செய்வது மிகவும் அபாயகரமானது. சிறு ஆறுகள், ஓடைகள், இவைகளின் தண்ணீரும் இப்படியே அசுத்தம் செய்யப்படுகிறது. இத்தண்ணீர் பல கிராமங்கள் வழியாக செல்லுமாகையால், இதை பல கிராமத்து ஜனங்கள் குடித்து, பல கிராமங்களிலும் வியாதிகள் பரவ காரணமாகிறது.

**கிணறுகள் :—**

கிணற்றைச் சுற்றிதான் அதிக அசுத்தம் ஏற்பட்டு அபாயம் விளைகின்றது. சுற்றிலும் தண்ணீர் எப்போதும் தங்குவதைப்பார்க்கலாம். அத்தேக்கத்தில் பன்றி முதலிய பிராணிகள் உருண்டு இன்னும் அசுத்தப் படுத்துகின்றன. அநேக கிணறுகளுக்கு சுற்றி சுவர்கள் கூட இருக்காது. இதனால் குழந்தைகள், ஸ்திரீகள், ஆடு மாடுகள் இவர்களுக்கெல்லாம் அபாயம் கூட ஏற்படுகிறது. கிணற்றிலிருந்து எடுக்கும் தண்ணீர் மறுபடியும் அதனுள்ளேயே விழுகிறது. ஸ்னானம், எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதல் இவைகள் செய்தால் அந்த அசுத்த தண்ணீரெல்லாம் கிணற்றுக் குள்ளேயே விழுந்து அந்த தண்ணீரையே குடித்தால் பல வியாதிகள் உண்டாகின்றன. மேலும் தண்ணீர் தேங்குவதால் கொசுக்கள், நோய் பூச்சிகள் இவைகள் விருத்தியடைய காரணமாகிறது. மழை காலத்திலோ கேட்கவேண்டியதில்லை.

**தடுக்கும் வழி :—**

கிணற்றைச் சுற்றி சுவர் எழுப்பவேண்டும். சுவற்றின் ஓரம் வளைவாகவும், வெளிப்புறம் சாய்ந்ததாகவும் இருக்கவேண்டும். அப்போதுதான் அதன் மேல் ஒரு சாமானையும் வைக்க மாட்டார்கள். எடுக்கும் தண்ணீரும் சுவரிலிருந்து கிணற்றுக்குள் வழிந்து போகாது. கிணற்றைச்சுற்றி சிமிட்டியில் மேடைகட்ட வேண்

டும். கிணற்றிலிருந்து வெளியெடுக்கும் தண்ணீரெல்லாம் சுலபமாக அப்புரம் போவதற்காக வாய்க்கால்கள் இருபக்கங்களிலும் கட்டி, தண்ணீரை அது வழியாக தொலவில் போகும்படி செய்யவேண்டும். அத்தண்ணீரெல்லாம் செடி, கொடி, வாழை மரம் முதலிய உபயோகமானவைகள் பயிர் செய்து அவைகளுக்குப் பாயும்படி செய்யவேண்டும். அப்போது தான் அவைகள் பூமிக்குள் நன்றாக இழுக்கப்பட்டு கொசு முதலியவைகள் விருத்தியடைய இடம் கொடுக்காது. கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க பிரத்தியேகமாக ஒரு ராட்டினமும் கயிறும் இருக்க வேண்டும். வாளிகளும் அப்படியே. அவைகள் அழுக்கு மண் முதலியவை இல்லாமல் சுத்தமாக வைக்கப் படவேண்டும். கிணற்று தண்ணீரை தொலவில் பாயவிட்டு அங்கு தேங்கும்படியாகவும் செய்யக்கூடாது.

பள்ளங்கள் :—

கிராம ஜனங்கள் அடுப்பு போடவும், சுவறு போடவும், கூரை போடவும் இவைகளுக்காக கண்ட இடங்களில் பள்ளம் தோண்டி மண் எடுக்கிறார்கள் வெயில் காலத்தில் இதனால் அதிக கெடுதல் இல்லாவிட்டாலும், மழை காலத்தில் அவைகளில் தண்ணீர் தேங்கி பல அபாயங்கள் உண்டாகின்றன. கொசுக்கள் அதிகரித்து மலேரியா முதலிய ஜுரம் பரவுகிறது. சரியான ஒரு இடத்தைப் பார்த்து ஜனங்களை அவ்விடத்திலேயே ஒரு முறையாக மண்தோண்டி எடுத்துக் கொள்ளும்படி செய்யவேண்டும். நாளாவட்டத்தில் இது ஒரு குளமாகி தண்ணீர் நிரைந்திருக்க காரணமாகும். அப்போது அவைகளை அசுத்தம் செய்யப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

பொதுவாக கிராம ஜனங்களின் ஒத்துழைப்பிலும், முயற்சியிலும் கிராமத்தின் சுகாதார முன்னேற்றம் இருக்கிறது.

---

## மாகாணத்தில் மாடுகளின் நோய்கள்.

1944-ம் வருஷம் ஜூன் மாதத்தைவிட ஜூலை மாதத்தில் கால்நடைகளின் தொத்து நோய் அதிகமாக இருந்தது என்று வெடர்னரி இலாகா டைரக்டர் யதாஸ்தில் தெரிவிக்கிறார். ஜூன் மாதத்தில் நோய் கண்டவை 479. இறந்தவை 4,051; ஜூலை மாதத்தில் 766-ம், 6,178 ரிண்டர்பெஸ்டு நோய் கண்டவை. ஜூன் மாதத்தில் 319, இறந்தவை 3,230. ஜூலை மாதத்தில் 364-ம், 3,633-ம். இந்நோய் தஞ்சாவூர், வட ஆற்காடு, தென்னாற்காடு ஜில்லாக்களில் ரொம்ப அதிகமாக இருந்தது. அங்கு 41.2 சத விகிதம் இறந்தன.

மண்டை தொத்து நோயும் ஜூன் மாதத்தைவிட ஜூலையில் அதிகமாக இருந்தது. அ.து. ஜூனில் 68 நோய் கண்டவை, 478 இறந்தன. ஜூலையில் 223-ம், 1,686-ம் ஆகி இருந்தது. இவ நெல்லூர், கிழக்கு, மேற்கு கோதாவரி ஜில்லாக்களில் மிகவும் அதிகமாக இருந்தது. 44.7% இறந்தன.

111 கிராமங்களில் பிளக் குவார்டர் (Black quarter) நோய் கண்டு ஜூலையில் 577 இறந்தன. முந்தி மாதம் இறந்தவை 270. மேற்கு கோதாவரி, கடப்பை, தஞ்சாவூர், தென் கன்னடம், சென்னை இவை நீங்கலாக மற்ற எல்லா ஜில்லாக்களிலும் இந்த நோய் இருந்தது.

அன்திராக்ஸ் (Anthirax) நோயின் 42 நோய் கண்டு 206 மடிந்தன. முன் மாதம் 16 நோய் கண்டு 66 இறந்தன.

கால், வாய் வியாதி கண்டவை 93-ம் இறந்தவை 6-ம். இது குண்டூர், நெல்லூர், கோயம்பத்தூர், மலையாளம் ஜில்லாக்களில் அதிகமாக இருந்தது.

# மாடுகளின் பாதுகாப்பு.

## மாகாண கவர்மெண்டுகளுக்கு சுற்றறிக்கை.

“தற்சமயம் கால் நடைகளின் விலை மிக உயர்வாக இருப்பதாலும், உழவு மாடுகள் தனக்கு அவசியம் தேவையாக இருப்பதாலும், முன்பெல்லாம்போல் இல்லாமல் விவசாயி கவர்மெண்டு உபதேசத்தை கோரி அதன்படி நடக்க விரும்புகிறான்” என்று இந்தியா கவர்மெண்டு அறிக்கை கூறுகிறது. அந்த அறிக்கையில் கால் நடை விருத்தி கமிஷனர், கால் நடை விருத்திக்காக கூறும் ஆலோசனைகளும் இருக்கின்றன. 10 வயதுக்கு மேல் பட்ட பிராணிகள் மட்டுமே கொல்லப்பட்டால் கால் நடை விருத்திக்கு அதிக தடவை ஏற்படாது என்று அவர் அபிப்பிராயப் படுகிறார். பலஹீன தேகஸ்திதியில் இருக்கும் பிராணிகளை கொல்லுவது வீண். தேகவலிவுள்ளதாக இருந்தால் வயதான பிராணிகள் கூட மூன்று மாதம் சரியான தீட்டுபோட்டு கொல்லுவதற்கு ஏற்றதாக செய்யலாம். மற்றபடி உபயோகமில்லாத பிராணிகளை கசாப்பு செய்ய வாங்கி கொழுக்க வைப்பது சந்தர்ப்பங்கள் ஏற்படும் போதெல்லாம் முறையாக செய்யலாம். கால் நடைகளின் தொத்து வியாதிகளை தடுக்க, மிருக வைத்தியர்களின் குறைவை சமாளிக்க இதரர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டும். தங்களுடைய எருதுகளை தாங்களே விருத்தி செய்ய பல விவசாயிகள் ஆரம்பித்திருக்கிறார்கள். பால் குன்றவாக இருப்பதால் கன்றுகளுக்கு வெண்ணை நீக்கின பால், இன்னும் இதர உற்பத்திகள் கொடுக்கலாம். சிலாஜ் முதலிய தீனிகளை கன்றுகளுக்கு அதிகப்படியாக கொடுக்கும்படியாக பிரசாரம் செய்ய வேண்டும். அவைகளை செய்யும் முறைகளும் செய்து காண்பிக்கப்பட வேண்டும். கன்று போடும் பசுவிற்கு சிலாஜாவது நல்ல வைக்கோலாவது கொடுக்கலாம். அல்லது எல்லா சத்துகளும் ஏற்ற அளவில் கொண்ட தயார் செய்ய தீனி தினுசு கொடுக்கலாம். ஒரு வயதுக்குள் இருக்கும் ஆண் கன்றுகளை கவர்மெண்டு வாங்கி, இதர பிராணிகள் அடிக்கடி வரக்கூடாத காட்டு பிரதேசங்களில் வளரும்படி செய்து அவைகளை வேலை செய்ய பருவம் வரும் வரையில் வளர்ப்பது என்று சென்னை கவர்மெண்டார் போட்டிருக்கும் திட்டம் போல் இதர திட்டங்களும் தயார் செய்யப்பட வேண்டும்.

இவைகளைக் குறித்து 31-12-44க்குள் ஒவ்வொரு மாகாணமும் செய்திருக்கும் அபிவிருத்திகளை விளக்கி ஒரு விபரம் அனுப்பும்படி இந்தியா கவர்மெண்டு கேட்டிருக்கிறது.

# கிராம உத்தியோகஸ்தர்களும், பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டுகளும்.

## பயிற்சியளிக்க கவர்மெண்டு திட்டம்.

கிராம அபிவிருத்தி விஷயங்களில் கிராம அதிகாரிகளுக்கு பயிற்சி யளிக்க திட்டத்தை கவர்மெண்டார் அனுமதித்திருக்கிறார்கள். மிகவும் வயதானவர்கள், அல்லது மற்ற ஏதாவது காரணத்தினால் கலெக்டர் வேண்டியதில்லை என்று அபிப் பிராயப்பட்டாலன்றி, மற்ற எல்லா கிராம அதிகாரிகளுக்கும், முனிசிபல் எல்லைக்குள் இருப்பவர்கள் நீங்கலாக, பயிற்சியளிக்கப்படும். நீக்கப்பட்டவர்கள் ஸ்தானத்தில் அவர்கள் பிள்ளைகளாவது வார்சுகளாவது அனுப்பப்படுவர்.

நிர்வாக உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படாத எல்லா பஞ்சாயத்து போர்டுகளும், அஃது எல்லா சில்லரை பஞ்சாயத்து பிரஸிடெண்டுகளும், பெரியவைகளில் 3,000 முதல் 5,000 வரையில வருமானமுள்ள போர்டு தலைவர்களுக்கும் அவர்கள் விரும்பினால் பயிற்சியளிக்கப்படும். அப்பள்ளிக்கூடம் கூடுமான வரையில் ஒவ்வொரு ஜில்லா தலைமை ஸ்தலத்தில் நடத்தப்படும். ஒரு மாதம் பயிற்சி. முக்கியமாக கிராமங்களை சுத்தமாகவும், சுகாதார முறையில் வைத்துக்

கொள்ளவும், ஜல சப்ளை, நீர்பாசனம், போக்குவரத்து சாதனங்கள் இவைகளை சரிவர கவனிக்கும் முறைகளும் கிராம அதிகாரிகளுக்கும், பஞ்சாயத்து பிரசிடெண்டுகளுக்கும் போதிக்கப்படும். தொத்து நோய்கள் வந்தால் அவைகளை பரவாமல் தடுக்கும் வழிகளும், தண்ணீர் அசுத்தப்படுத்துவதை தடுக்கும் முறைகளும் கற்பிக்கப்படும். கிராமவாசிகளுக்கு சுத்தமான குடி தண்ணீர் கிடைக்கும் வழிகளும் கற்பிக்கப்படும். சிறிய வாராவதிகள் ரஸ்தாக்கள் இவைகள் போடுவதும், கிணறு வெட்டுவது, வாய்க்கால்களுக்கு சில்லரை ரிபேர் வேலைகள், குளங்கள் முதலியவைகளுக்கு கரை போடுவது முதலியவை கற்பிக்கப்படும்.

மேலும் பொதுவாக கால்வாய்கள், சாலைகள் ஓரங்களில் மரங்கள் வளர்ப்பது, பார்க்குகள், தோப்புகள் ஏற்படுத்துவது இவைகளைப்பற்றியும் போதிக்கப்படுவார்கள். எல்லா போதனையும் நேராக செய்து காண்பிக்கும் முறையில் செய்யப்படும். மாதிரி கிராமங்களுக்கும் கவர்மெண்டு பண்ணைகளுக்கும், தொழில் பள்ளிக்கூடங்களுக்கும் அவர்கள் அழைத்துக்கொண்டு போகப்பட்டு காண்பிக்கப்படுவார்கள்.

## கிராம புனருத்தாரணம்.

### பரோடா சமஸ்தானத்தில் பரிக்ஷை செய்யப்படும் முறை.

சாம் ராஜ்ய விவசாய ஆராய்ச்சி கௌன்சில் 1945-46 வருஷத்தில் செய்ய வேண்டிய ஆராய்ச்சி, அபிவிருத்தி திட்டத்தை அனுமதிததது: பல புதிய திட்டங்கள் அமுலுக்கு கொண்டுவரப்படப் போகின்றன. அவைகளுக்காக 8 லக்ஷம் ரூபாய் செலவு அனுமதிக்கப் பட்டிருக்கிறது. தற்போதிருக்கும் திட்டங்களை விருத்திசெய்ய இன்னும் 3 லக்ஷம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. 1946-மார்ச மாதத்திற்குள் முடிவடையும். இதா திட்டங்களின் அபிவிருத்திக்கு மேலும் 3 லக்ஷம் வைக்கப் பட்டிருக்கிறது.

பரோடா சமஸ்தானம் தற்சமயம் பணலேவாதேவிக்காரர்களிடம் சிக்கியிருக்கும் 5 கிராமங்களை வாங்கி அவைகளில் பழையபடி குடிகளை வரவழைத்து 5 வெவ்வேறு முறைகளில் விவசாயம் முதலியவைகளை செய்யச்சொல்லி, எந்த முறையினால் அதிக பலன் கிடைக்கிறது என்று பரிக்ஷித்து பார்க்க ஒரு திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஒரு கிராமத்தில் ஒரே குடும்பத்திற்கு மொத்தமாக 15 ஏகரா பூமி கொடுக்கப்படும். அவை துண்டிக்கப்படக்கூடாது. சமஸ்தானம் போட்டிருக்கும் திட்டப்படி பயிர்செய்யப்பட வேண்டும். கடைசியில் இக் கிராமத்து குடிகளை இதை வாங்கும்படி செய்யப்படும். இரண்டாவது கிராமத்திலும் இப்படித்தான். ஆனால் அதில் பயிர் செய்பவர்கள் எப்போதும் சமஸ்தானத்தின் குடிகளாகவே இருப்பார்கள். மூன்றாவதில், மொத்தப்பயிற் செய்யும் முறை அனுஷ்டிக்கப்படும். அ. து. பூமி ஏகமாக பயிர் செய்யப்பட்டு, மாஞல் அந்தந்த குடியின் பூமி விஸ்திரணத்திற்கு ஏற்றவாறு பங்கிட்டுக் கொள்ளப்படவேண்டும். நாலாவது கிராமம் கூட்டுமுறையில் பயிர் செய்யப்படும். ஒவ்வொரு குடிக்கும் அவனுடைய எருதுகளின் உழைப்பிற்கும் ஏற்றவாறு, மொத்த பயிரில் பாகம் கொடுக்கப்படும். ஐந்தாவதில் சமஸ்தானமே பயிர்செய்யும். பூமி கிராமத்து ஜனங்களுக்கு சொந்தமானது, குடிகளுக்கு அன்னன்றாடி கூலியும், வருஷ முடிவில் லாபத்தில் ஒரு பாகமும் கொடுக்கப்படும்.

நெல்லை தற்போதை விட இன்னும் குறைந்த காலத்தில் பயிராகும்படி செய்ய கல்கத்தா சர்வ கலா சாலையில் சில ஆராய்ச்சிகள் செய்யப்படும். இந்த முறைவெற்றி யடைந்தால் வெள்ளத்தினாலும் இதா காரணங்களாலும் இப்போது ஏற்படும் நஷ்டம் குறைவாகும்.

மைகாலஜி ஆராய்ச்சிக்காக பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த 45,000 ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

# லோகல் போர்டுகள் லைசன்ஸ் கட்டணம் வசூலிக்குமுன் நோட்டீஸ் கொடுக்க வேண்டிய அவசியம்

---

## ஹைகோர்டு தீர்ப்பு.

சென்னை ஸ்தாபன சட்டம் 4-வது ஷெடியூல் 22-வது ரூல்படி நோட்டீஸ் கொடுக்காமல் 184 செக்ஷன்படி லைசென்ஸ் கட்டணம் வசூலிக்க ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிகாரமுண்டா என்ற விஷயத்தைப்பற்றி சென்னை ஹைகோர்ட்டில் ஒரு வழக்கில் சமீபத்தில் தீர்ப்பளிக்கப்பட்டது.

கனிகிரி பஞ்சாயத்து போர்டு ஒரு பஸ் சொந்தக்காரரின் பேரில் பஸ் ஸ்டாண்டு லைசென்ஸ் கட்டணம் வசூலிக்க ஒரு தாவா முனிசிப் கோர்ட்டில் போட்டது. பஸ் சொந்தக்காரர், தனக்கு அதை கொடுக்கும்படி தாவாவுக்கு முன் நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை யாதலால், தாவா செல்லாது என்று ஆக்ஷேபித்தார். இந்த ஆக்ஷேபணையை ஏற்றுக்கொண்டு முனிசிப்பு தாவாவை தள்ளுபடி செய்தார். பஞ்சாயத்து போர்டு அதன் பேரில் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தது. ஜட்ஜ் பையர்ஸ் துரை சட்டத்தின் 32 (3) ரூல்படி அரை வருஷத்திற்குள் லைசென்ஸ் தொகை கட்டும்படி நோட்டீஸ் கொடுக்கவேண்டியது அவசியம் என்று ஏற்படுகிறதென்றும், அப்படி நோட்டீஸ் கொடுக்காத பக்ஷத்தில் கட்டணம் வசூலிக்க ஆதாரமே கிடையாது என்றும் கூறி அப்பீலை தள்ளிவிட்டார். சென்னை ஜில்லா முனிசிபாலிடி ஆக்டு ரூல் 29 (3) படி இருப்பது வேறு விஷயம் என்று கூறினர்.

---

# வர்த்தமானங்களும், குறிப்புகளும்.

---

**இந்தியாவில் புகையிலை பயிர் விருத்தி செய்ய திட்டம்.**

சாம்ராஜ்ய விவசாய ஆராய்ச்சி சங்கம். இதற்காக 16 லக்ஷ ரூபாய் பிடிக்கும் படியான ஒரு திட்டம் தயார் செய்திருக்கிறது. அடுத்த குளிர் காலத்தில் இந்த வேலை இந்திய மத்திய புகையிலை கமிடி துவக்கும். புகையிலை வரி நிதியிலிருந்து ரூபாய் 10 லக்ஷம் ஒவ்வொரு வருஷமும் இதற்கு கொடுக்கப்படும். மேற்படி கமிடி, ஆராய்ச்சி, அபிவிருத்தி, மார்க்கெட் கண்டு பிடிப்பது இவைகளை கவனிக்கும்.

* * *

**பயிற்சியடையும் ஆரம்ப கல்வி உபாத்தியாயர்களுக்கு உபகார சம்பளம் அதிகரிப்பு.**

யுத்தம் நீடித்திருக்கும் வரையில் மேற்படி பயிற்சி பெறும் உபாத்தியாயர்களின் உபகார சம்பளம் 6 ரூபாயிலிருந்து 8 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

* * *

**இறந்தவர் மீண்டும் உயிர் பெறுதல்.**

ரஷியாவில் நூதன முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. யுத்தத்தில் பலத்த காயம் அடைந்து சாகுந்தருவாயிலிருப்பவர்களுக்கும், இறந்தவர்களுக்குங்கூட சில ரஷிய வைத்திய நிபுணர்கள் ஒருவித சிகிச்சை செய்வதின் மூலம் அவர்கள்

மீண்டும் உயிருடன் ஆகிறார்கள். சிகிச்சை செய்யப்பட்ட 51 பேர்களில் 12 பேர்கள் காப்பாற்றப்பட்டார்கள். பாக்கியுள்ளவர்களில் பலர் பல மணி நேரமும், பல நாட்களும் ஜீவித்திருந்து கடிதங்கள் எழுதுவது, பேசுவது, உண்பது முதலிய வேலைகளையும் செய்தனர். மிகவும் பலத்த காயமடைந்து அதிக ரத்த போக்கினால் மயக்கமடைந்து இறந்துவிட்டதாகக் கருதப்பட்ட ஒரு சிறிய ராணுவ சிப்பாய்க்கு இவ்வைத்திய கோஷ்டியின் தலைவர் இச்சிகிச்சை செய்த ஒரு நிமிஷத்திற்கெல்லாம் அவர் ஹிருதயம் அடிக்க ஆரம்பித்து, 2 நிமிஷத்தில் அவர் சுவாசம்விட ஆரம்பித்தார். ஒரு மணி நேரம் கழித்து அவருக்கு மீண்டும் பிரக்ஞை வந்தது. இப்போது அவர் குணமடைந்திருக்கிறார். பிற்காலத்தில் இந்த சிகிச்சையால் பலருக்கு உயிர் உண்டாக்க இடமிருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

*  •  *

**சென்னை மாகாணத்தில் ஜனன விகிதத்தில் எண்ணிக்கை குறைவு.**

1936-இல் ஜனனம் 36.2 ; 1942-இல் 33.81 ; 1943-இல் 31.12. இப்படியாக படிப்படியாக குறைந்து வருவதைப்பற்றி விசாரித்து தகுந்த ஏற்பாடுகள் செய்யும்படி சென்னை கவர்மெண்டார் சுகாதார டைரக்டரை கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மரண விகிதம் 1942-இல் 22.49-இலிருந்து 1943-இல் 25.25 ஆக அதிகரித்திருக்கிறது. சிசு மரணமும் 1942-இல் 159.67-இலிருந்து 1943-இல் 172.79 ஆக அதிகரித்திருக்கிறது.

கிராம உத்தியோகஸ்தர்கள் அப்போதைக்கப்போது சரியான புள்ளி விவரங்கள் அனுப்பவேண்டிய அவசியத்தைப்பற்றியும் கலெக்டர்கள் மூலம் வற்புறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

*  *  •

**பம்பாய் யூனிவர்சிடிக்கு 4 லக்ஷம் ரூபாய்.**

ரசாயன டெக்னாலஜி படிப்பு விருத்திக்காக மேற்படி தொகையை மில் சொந்தக்காரர்கள் சங்கத்தின் தலைவர் சர் விடல் சந்தாவர்கர் அளித்திருக்கிறார்.

*  *  *

**குப்பைகளிலிருந்து எருவு.**

இந்தியா கவர்மெண்டு 1943-இல் துவக்கிய பட்டணத்து குப்பைகளை எருக்களாக மாற்றுவது என்ற அகில இந்திய திட்டம் மிகவும் பலன் அளித்திருக்கிறது என்று வருஷாந்திர அறிக்கையிலிருந்து தெரிகிறது. முதல் வருஷத்தில் பல வேறு மாகாணங்களிலிருந்தும் 15 பையே கெமிஸ்டுகளையும், 40 உதவி கெமிஸ்டுகளையும் பெங்களூரில் செய்யப்பட்டு வந்த பட்டணங்களின் குப்பைகளை எருக்களாக செய்வதில் பயிற்சியளிப்பதாயும் பிறகு சுகாதார இன்ஸ்பெக்டர்களை பயிற்சி செய்வதாயும் பின்னிட்டு முனிசிபாலிடிகளில் மொத்தமாக எருக்கள் தயார் செய்யவும் திட்டம் போடப்பட்டிருந்தது. ஆனால் 60 சுகாதார இன்ஸ்பெக்டர்களுக்குமேல் முதல் வருஷத்திலேயே பயிற்சியளிக்கப்பட்டார்கள். இந்தியா முழுவதும் 100 முனிசிபல் பட்டணங்களுக்குமேல் எரு செய்யும் வேலை துவக்கப்பட்டது. சுமார் 13,000 டன் கம்போஸ்ட்டு எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 50,000 டன்களுக்கு மேல் செய்து முடிக்கப்பட்டது.

மேற்படி எருவை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 1945-இல் 1,00,000 டன் எருவு விநியோகிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*  *  *

**கோய்னாவின் விலை குறைக்கப்பட்டது.**

2-9-44 முதல் ஒரு மாத்திரையின் சில்லரை விலை 3 அணாவிலிருந்து 6 பைக்கு குறைக்கப்பட்டிருப்பதாக ஒரு அறிக்கைவிடப்பட்டிருக்கிறது.

---

# மதராஸ் ப்ரோவின்ஷியல் கோவாபரேடிவ் பாங்க், லிமிடெட்.

(1912 வருடம் II-வது ஆக்ட் ஆகிய 1932 வருடம் VI ஆக்டின்கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

---


தலைமை ஆபீஸ்.

சைனா பஜார் ரோட், மதராஸ். போன் நெ. 2390.

மைலாப்பூர் பிராஞ்சு :

லஸ் சர்ச் ரோட், மைலாப்பூர், போன் நெ. 3334.

எழும்பூர் பிராஞ்சு:

இப்ராஹிம் காலனி, எழும்பூர், போன் நெ. 8510.

பிரஸிடெண்டு :

மிஸ்டர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஸி.

செக்ரடேரி :

டி. ராகவேந்திர ராவ்.


இந்த நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கு பொருப்பு சம்பாதித்துக் கொடுப்பதில் இந்த பாங்கு முக்கிய ஸ்தாபனமாகும்.

இந்த பாங்கு மதராஸ் கார்பரேஷனுக்கும், மதராஸ் யூனிவர்ஸிடி, அண்ணாமலை, ஆந்திரா யூனிவர்ஸிடிகளுக்கும், மற்ற லோகல் போர்டுகள், டிஸ்டிரிக்ட் முனிஸிப்பாலிடிகளுக்கும் பாங்காக இருக்கின்றது.

விதிகள், வியாபார நிபந்தனைக்கும் கீழ்கண்டவருக்கு எழுதவும்

செக்ரடேரி,
தலைமை ஆபீஸ்
அல்லது
பிராஞ்சுகள்.

---


வெளியிட்டவர், பிரசுரகர்த்தா, மிஸ்டர். வி. ஸிப்பன்னா, பி.ஏ., பி.எல்.,
187, ராயப்பேட்டை ஹைரோட், ராயப்பேட்டை, மதராஸ்.

மதராஸ் மவுண்ட் ரோட் நெ. 1/17 ல் அமைந்திருக்கும்
சென்ட்ரல் கோவாபரேடிவ் அச்சுக்கூடத்தில்
மிஸ்டர் ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. ஏ., அவர்களால் பதிப்பிக்கப்பட்டது

# ஸௌத் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஸொஸைடி, லிமிடெட், மதருஸ்.

ஸ்ரீ பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா, எம். எல். ஏ., (பிரஸிடென்ட்.)

---

கோவாபரேடிவ் இன்ஷியூரென்ஸ் ஒன்றே உங்களுக்குக் குறைந்த பிரிமிய விகிதங்களில் மிகுந்த பாதுகளிப்பதோடு, நல்ல வருஷவாரி லாபத்தொகையும் தாராளமான பாலிஸி நிபந்தனைகளும் மற்றும் உன்னத சலுகைகளும் காட்ட வல்லது.

லாபத்தொகை முழுவதும் பாலிஸிதார்களையே அடைகிறது. இந்த ஸொஸைடி அவர்களுக்கே சொந்தம், அவர்களுக்காகவே இருக்கிறது—அவர்களாலேயே நடத்தப்பெறுகிறது.

மிகச்சிக்கனமாக காரியாதிகள் நடத்தப்பட்டு, அரசாங்கத்தாரின் நேரான கண்காணிப்பில் பலமான க்ஷேமநிதி முதலியன ஏற்படுத்திக்கொண்டிருப்பதால் அதிக க்ஷேமகரமாக உள்ளது.

| | | |
|---|---|---|
| பாலிஸி தொகை | — | 1,60,00,000. |
| லைப்பண்டு | — | 16,00,000. |

உங்களுக்குத் தக்க பாலிஸி விபரத்திற்கு எழுதுங்கள்.

**வி. வெங்கடாசலம்,** எம். ஏ., பி. எல்.,
காரியதரிசி.